DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 298/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | திரு. ஆறுச்சாமி |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the Day of 03.06.2019

முதல் விசாரணை :

நான் வஞ்சிபாளயத்தில் தோட்டத்தில் குடியிருந்துகொண்டு விவசாயம் வேலை செய்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். நடராஜ் ,ரத்தினம் ஆகியோரை தெரியும். 28-11-2015 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் பண்ணைக்கு அருகில் நான் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரிகள் இருவரும் என்னிடம் வந்து தகராறு செய்தார்கள். நடராஜ் கையில் வைத்திருந்த இரும்புகம்பியால் என் முதுகிலும் ரத்தினம் தனது கையில் வைத்திருந்த கம்பியால் என் தலையில் அடித்துவிட்டார். சுப்பிரமணியை நடராஜ் இரும்புகம்பியால் முதுகில் அடித்துவிட்டார். நெகமம் காவல்நிலையத்தில் தகவல் சொல்லிவிட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அங்கிருந்து கோயம்புத்துார் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றோம். சாட்சி சாபொ 1 ஐ அடையாளம் காட்டி அதனால்தான் எதிரிகள் எங்களை அடித்தார்கள் என்று கூறினார். போலிசார் விசாரித்தனர்.